

எத்தனுக்கு எத்தன்!



ஸ்பைடர் தோன்றும்
எத்தனுக்கு எத்தன்!
நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கு முன்னால் ஸ்பைடர் ஈடு இணையற்ற ஒரு குற்றவாளியாக நடமாடி வந்தான்! சக்திவாய்ந்த பல கருவிகளின் துணைகொண்டு, அவன் நடத்திய சாகஸக் கொள்ளைகளின் எண்ணிக்கை கணக்கிலடங்கா... சட்டத்தின் பிடியில் சிக்காமல் வெகு சாமர்த்தியமாக ஸ்பைடர் செயல்பட்டு வந்தபோதிலும், மிக வலிமையானதொரு எதிரியுடன் மோத வேண்டிய கட்டாயத்தை அவன் பேராசை ஒரு முறை ஏற்படுத்தியது.

## அத்தியாயம் 1 முகவரியில் ஒரு மாற்றம்




கோபாவேசத்தில் ஸ்பைடர் துடித்தான்!
அற்பப்பதரே! துடுக்காகப் பேசும் அளவிற்குத் திமிர் வந்துவிட்டதா?
நான் தான் ஸ்பைடர்! குற்ற உலகின் சக்ரவர்த்தி.. நவீன உலகின் சிம்ம சொப்பனம்!. அப்படியிருக்க, நாயும் நரியும் மட்டுமே வசிக்கக்கூடிய இந்தக் குகையில் நான் ராஜ்யம் புரிவதா?...
உலகமே என்னைக் கண்டு பிரமித்து நிற்கிறது... இந்நிலையில், என் வாசஸ்தலமும் அதற்கேற்றாற் போல பிரமிப்பூட்டும் வகையில் இருக்க வேண்டாமா? ஆகையால் இன்றுமுதல், உலகின் மிக உயரமான எம்பயர் பில்டிங்கை நான் ஆக்ரமிக்கப் போகிறேன்!



ஸ்பைடரின் கூட்டாளிகள் திகைத்துப்போய் நின்றனர்!
என்னது... எம்பயர் ஸ்டேட் பில்டிங்கை ஆக்ரமிப்பதா? நிஜமாகவா?
நான் சொன்னது காதில் விழவில்லையா? ...எந்த நிமிடமும் தலைமையகத்தை இடம் மாற்றத தயாராக இருங்கள்!


பின்னர்—
என் புது வீடு ரொம்ப ஜோர்!... இல்லையா பெல்ஹாம்?
வீடு நன்றாகத்தான் உள்ளது - ஆனால் உள்ளே பிரவேசிப்பதில் தான் சிக்கலே உள்ளது!


பெல்ஹாம் எதிர்பார்த்தது போல சிக்கல் ஏற்படவில்லை! ஸ்பைடரைக் கண்டவுடன், மேல் மாடியிலிருந்த அனைவரும் கதிகலங்கிப் போய் ஓட்டம் பிடித்தனர்!
அதைத் தெரிந்து கொள்வதற்காக நான் காத்திருக்கப் போவதில்லை!
அதோ... ஸ்பைடர்
ஐயோ! இங்கு எதற்கு வருகிறான்?
சற்று நேரத்திற்கெல்லாம், வானளாவிய அக்கட்டிடத்தின் மேல் மாடியில், ஸ்பைடர் வெற்றிக் களிப்பில் கொக்கரித்துக் கொண்டிருந்தான்!
பார்த்தாயா பெல்ஹாம்? ஸ்பைடரை எதிர்த்து நிற்க எவனுக்கும் வலு கிடையாது! ஹாஹா!
போலீசாரை மறந்து விடாதே ஸ்பைடர்!


பெல்ஹாம் சொன்னதுபோலவே, சில மாடிகள் கீழே, கட்டிடத்தின் செக்யூரிட்டி கார்டுகள் ஸ்பைடரை எதிர்கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்!
உச்சி மாடியில் ஸ்பைடர் இருக்கிறான்!
கூட்டத்தோடு... வந்திருக்கிறான்!
ஓ.கே, ஓ.கே.. இனி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்!



பீதியில், தலைதெறிக்கப் படிகளில் ஓடிக் கொண்டிருந்த மக்களை ஊடுருவிச் சென்றனர் காவலர்கள்...
காப்பாற்றுங்கள்-ஸ்பைடர் வந்துவிட்டான்!
தெரியும் அம்மா! சற்று விலகி நின்றீர்களானால் முன்னே செல்ல முடியும்!
8



தீவிரமாக முன்னேறிய காவலர்களைக் கண்டு ஸ்பைடர் கலங்கவில்லை. மாறாக-
நீ தான் ஸ்பைடரா? ஒழுங்காக சரணடைந்துவிடு!
ஹாஹாஹா! நான்தான் ஸ்பைடர் என்பதை உனக்கு உணர்த்துகிறேன் பார்!


மறுகணம், பட்டுப்போன்ற ஆனால் எஃகை விடவும் உறுதியான வலை, காவலாளிகளின் கைகளைப் பிணைத்தது!
ஆ ஆ ஆ!
ஹெ! ஹெ! ஹெ!


தூண்டிலில் சிக்கிய மீன்களைப் போல, இரு காவலாளிகளையும் இழுத்தான் ஸ்பைடர்...!
ஹிஹி... என்னைப் பார்க்க வந்தமைக்கு ரொம்ப நன்றி!
ஊஊ!
ஆவ்!
ஐயோ!
ஆஆஆ!
...இனி நீங்கள் போகலாம்!
PANAM
10


101 வது மாடியிலிருந்து வெளியே வீசப்பட்ட காவலர்கள், கிட்டத்தட்ட பத்தாவது மாடிவரை, தலைகீழாக, மயிர்க்கூச் செறியும் வகையில் தொங்கிக் கொண்டே வந்தனர்! உடனே-
...நுனியில் தொங்கும் காவலரின் எடையைத் தாங்கத் தயாராகிக் கொண்டு, வலைத் துப்பாக்கியின் இயக்கத்தை நிறுத்தினான் ஸ்பைடர்!
அறுந்து விடாமல், எலாஸ்டிக் போல வலை செயல்படுவதால், இரு காவலர்களும் சாலையின் மேலே 50 அடி உயரததில் பத்திரமாகத் தொங்கிக் கொண்டிருப்பர்.
ஸ்பைடரின் வருகையை ஊரெல்லாம் விளம்பரப்படுத்தும்வகையில்)



ஸ்பிரிங் போல் மேலும் கீழும் குதிக்கும் வலையில் சிக்கியிருந்த காவலாளிகளோ, பயத்தில் உறைந்து போயிருந்தனர்!


அதற்குள் நியூயார்க் நகரப் போலீஸாருக்கு செய்தி எட்டியதால், ஸ்தலத்திற்கு ஒரு பெரும் பட்டாளமே விரைந்தது!
பின்னே போங்கள்! ஊம்!
அம்மா, ஸ்பைடருடன் போலீஸ்காரர்கள் சண்டை போடுவதைப் பார்க்கலாம்! இரு!
சத்தம் போடாமல் வா எல்மர்!


துரித கதியில் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன - செயல்படுத்தப்பட்டன!
மேல்மாடிகளிலிருந்து ஆரம்பித்து கட்டிடத்தையே காலிபண்ணுங்கள்! ஸ்பைடரால், அப்பாவி மக்கள் பலியாகக் கூடாது!
மேல இருபது மாடிகள் காலியாக்கப் பட்ட பின்னரே, போலீஸார் உஷாராக முன்னேறினர்!
போலீஸாரைக் கண்டு; ஸ்பைடரின் சகாக்கள் பீதியுற்ற பொழுதிலும் ஸ்பைடர் துளியும் கலங்கவில்லை!
பாஸ்!... போலீஸார் வருகின்றனர்! வகையாக சிக்கிக் கொண்டோம்!
ஹா! சிக்கிக்கொண்டது யார் என்பது இன்னும் சில நொடிகளில் தெரியும் பார்!
13


படிகளில் உருட்டிவிட்டான் ஸ்பைடர்!
நம் காக்கிச் சட்டை நண்பர்கள் இந்தச் 'சிக்கலை' எப்படித் தீர்க்கிறார்கள் என்று பார்க்கலாம்!
ஒவ்வொரு உருளலுடனும், வலைப்பந்து திரித்திரியாய் பிரிந்து - விரிந்துகொண்டே வந்தது...
உஷார்!
டம்! டம்!


பின்னர்...
படார்!
...அசுர வேகத்தில் உருண்டு வந்த அந்தப் பந்திடமிருந்து போலீசாரால் தப்ப முடியவில்லை!
அவர்கள் உருள்வதைக் கண்டு ஸ்பைடர் கொக்கரித்தான்!
ஹா!ஹா!ஹா! வலுவான என் வலைப்பந்தை எதிர்க்க வேறு யாரேனும் வருகிறீர்களா?
ஆனால் போலீஸ் காப்டனான லெய்ன்ஸ்டர் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை!
என்ன செய்யலாம் காப்டன்?
படிகள் வழியாகப் போக முடியவில்லையெனில், லிஃப்டை உபயோகியுங்கள்!


பொழுதிலும், விசேட சாவியால் லிஃப்ட்
கதவுகள் திறக்கப்பட்டன...
இந்த வழியாக நாம் வருவோம் என்பதை அவன் எதிர்பார்க்க மாட்டான்!
'லபக்' கென அமுக்கி விடலாம் பயலே!


ஸ்பைடரின் மேல்மாடிக் கோட்டை மீது காப்டன் லெய்னிஸ்டர் இரண்டாவது தாக்குதலைத் துவக்கினார்!
ஓசையின்றி செல்லுங்கள்! துப்பாக்கிகள் தயார் நிலையில் இருக்கட்டும்!


அதே சமயம், மேல் மாடியில் தன் புது இருப்பிடத்தை ஆராய்ந்து கொண்டிருந்தான் ஸ்பைடர்!
இந்த சாமான்களையெல்லாம் என்ன செய்வது பாஸ்? இவை நமக்குத் தேவையில்லையே!
எல்லாவற்றையும் தூக்கி, லிஃப்ட் துவாரத்திற்குள் விட்டெறியுங்கள்!
பூட்டுக்களைத் திறப்பதில் பலே கில்லாடியான ஆர்டினியிடம் லிஃப்ட் கதவுகள் தோற்றுப் போயின!
ஓ.கே பாய்ஸ்! கதவைத் திறந்துவிட்டேன்! எல்லாவற்றையும் கொண்டுவந்து கொட்டுங்கள்!
முதலில் ஒரு டைப்ரைட்டர் கீழே சென்றது... ஓசையின்றி ஏணிகளில் ஏறிக்கொண்டிருக்கும் காவலாளியின் காதை உரசிக்கொண்டு!
ஹே! ஆபத்து! மேலே இருந்து எறிகிறார்கள்!


பயத்தில் போலீஸ்காரர் போட்ட சத்தத்தைக் கேட்டனர் ஸ்பைடரின் சகாக்கள்! மறுகணம் சாமான்களை புதுவகத்தோடு எறிந்தனர்!
சடக்!
குப்பைப் பயல்களுக்கு குப்பையாலேயே அபிஷேகம்!
18


அப்பொழுது—
நல்ல காரியம் செய்தாய் ஆர்டினி! நம் புதிய தலைமையகத்தில், மிக நன்றாகவே பொழுது போகிறது... ஹி, ஹி!
தன் பெல்டிலிருந்து இரு சிறு புட்டிகளை ஸ்பைடர் எடுத்தான்...
இந்தக்குட்டி வெடிகுண்டுகள், மேலும் உற்சாகமாயிருக்க உதவும்!
கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் வெடிகள் வெடித்தன...
டமால்


தீ!...தீ!
பதற வேண்டாம் சட்டத்தின் காவலர்களே, வேண்டாத குப்பையை எரிப்பதற்காகவே இது!


ஹூம், லிஃப்ட் மூலம் இனி ஒருக்காலும் செல்ல முடியாது!
மனம் தளரக் கூடாது சார்ஜெண்ட்!.





நிதானமாக, தன் ஆக்கிரமிப்பை முழுமைப்படுத்திக் கொண்டிருந்தான் ஸ்பைடர்!
எல்லாப் பாதைகளையும் மறித்து விட்டான் பாவி! வலைகளை நாம் வெட்டிய மறுகணமே அவனுக்குத் தெரிந்துவிடும்...
உட்புறமாக நுழையமுடியவில்லையெனில், வெளியிலிருந்து தாக்குதல் நடத்தலாம்!
அன்றைய வேலையில் மிகவும் திருப்தியடைந்த ஆர்டினி, ஸ்பைடரும் வெற்றி மிதப்பில் இருப்பான் என எதிர்பார்த்தான். மாறாக, ஸ்பைடரோ, கண்காணிப்புக் கூடத்தில் மும்முரமாக இருந்தான்!
போலீஸ்காரப் பயல்களை தோற்கடித்தாயிற்று பாஸ்! அவர்களால் எதுவுமே இனி செயயமுடியாது!
உன் பேச்சிலிருந்து, நீ ஏன் ஒரு கழிசடைக் குற்றவாளியாக - என் போன்ற மாமேதையின் துணையின்றி பிழைக்கமுடியாத அறிவிலியாக இருக்கிறாய் என்பது புரிகிறது!
21


அவ்வளவு
போலீஸார் தோல்வியை
ஒத்துக் கொள்வார்கள்
என்று மனப்பால்
குடித்தாயா மடையா?
பாருங்கள்!



ஸ்பைடர் ஆக்ரமித்துக் கொண்டிருந்த மேல்மாடியை
நோக்கி, தேசிய பாதுகாப்புப் படையினரும்,
போலீஸாரும், ஹெலிகாப்டர்களில் விரைந்து
கொண்டிருந்தனர்!...
ஹெலிகாப்டருள் இருக்கும்
காவலர்களின் துப்பாக்கிக்கு
இரையாகாமல் இருக்க வேண்டு
மானால், எங்காவது போய் பதுங்கிக்
கொள் ஆர்டினி! இவர்களை நான்
கவனித்துக் கொள்கிறேன்!


எதிராளியின் கருவிழி உனக்குத் தெரியும்வரை சுடாதே என்று சொல்லியவன் சரியான பித்துக்குளியாகவோ அல்லது உயிர் மேல் ஆசை இல்லாத மடையனாகவோ இருந்திருக்க வேண்டும்!
ஸ்பைடர் பித்துக்குளியும் அல்ல - உயிராசையற்றவனும் அல்ல! அதனால் எதிரிகள் நெருங்குவதற்கு முன்னரே தன் தாக்குதலைத் துவக்கினான்!
விர்ர்ர்...!






ஸ்பைடரின் விந்தைவலை, ஹெலிகாப்டரின் காற்றாடிகளை ஸ்தம்பிக்கச் செய்த மறுகணம், பாராசூட்டில் சிக்கியது போல, ஹெலிகாப்டர் வலைப் பின்னலுடன் பூமியை நோக்கி விழுந்தது...!



...உயரமான பல கட்டிடங்களின் உச்சியில் வலை சிக்கிக்கொள்ள, ஹெலிகாப்டரின் பூமி நோக்கிய பயணம் தடைப்பட்டது! அந்தரத்தில் புதுமையானதொரு அலங்காரம் போல ஊசலாடிக்கொண்டிருந்தது!
ரத்தத்தை உறைய வைக்கும் இக் காட்சியைக் கண்ணுற்ற இதர ஹெலிகாப்டர் படையினர் தாக்குதல் உத்தரவை வழங்கினர்!
சிறு அசைவு தெரிந்தால்கூட சுடுங்கள்! நச்சு வாயுவையும் பிரயோகியுங்கள்!


ஆனால் ஸ்பைடரோ தயாராக இருந்தான்!
இந்த நச்சு வாயுவை நான் சுவாசிப்பேன் என்று எதிர்பார்க்கிறார்களா மடையர்கள் ?!!


ஏற்கனவே சுவருடன் அவன் பொருத்தியிருந்த கருவியிலிருந்து முளைத்த ஏரியலைப் பற்றியவாறே ஸ்பைடர் 'ஜிவ்'வென உயரே பறந்தான் !
விர்ர்ர்...!



ஜாக்கிரதை! அந்த ஏரிய லுடன் காற்ருடிகள் மோதிவிடப் போகின்றன...
இனி வேடிக்கையைப் பாருங்கள் தம்பிகளா!
அதே சமயம், சுவரில் பொருத்தப்பட்டிருந்த நாசக்கருவியிலிருந்து இரண்டாவதாக ஒரு ஏரியல் முளைத்தது—வலைப் பின்னல் ஒன்றை தன்னுடன் இழுத்தவாறே!



மின்னல் வேகத்தில் ஏற்பட்ட அபாயத்தை, முதல் ஹெலிகாப்டரால் தவிர்க்க முடியவில்லை!
சடக்!
தங்கள் வரவு நல்வரவாகுக மிஸ்டர் ஹெலிகாப்டர்!



எஞ்சியிருந்த மூன்று ஹெலிகாப்டர்களும், தூரத்திலிருந்தே ஸ்பைடரை நோக்கிச் சுட்டன ஆனால் ஸ்பைடரோ, ஏரியலை விட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து...
ழமீல்!



செத்தொழிந்தான் ஸ்பைடர்!


... மூன்றாவதாக, முளைத்ததொரு ஏரியலை கனகச்சிதமாகப் பற்றிக் கொண்டான்!


ஏரியலை ஒரு கையால் பற்றிக் கொண்டு ஸ்பைடர் அந்தரத்தில் தொங்க, புதிதாகத் தோன்றிய வலையின் பாதையில் ஹெலிகாப்டர்கள் மாட்டிக் கொண்டன!


அதில் ஒரு ஹெலிகாப்டர் பக்கவாட்டில் சாய்ந்துவிட, உள்ளேயிருந்த காவலர்கள் 'பொல பொல' வென வெளியே விழுந்தனர்...!!!
ஆ ஆ!
ஆ ஆ... காப்பாற்றுங்கள்! .. ஆ... ஆ!


ஆனால்—


ஜன்னல் விளிம்பொன்றில் நின்றுகொண்டே, தன் முதுகுடன் இணைத்திருந்த வலையைப் பயன்படுத்தினான் ஸ்பைடர்!
ஏமாந்துவிடாதீர்கள் மடையர்களே!... நான் கருணை காட்டப் போவதில்லை!



கொஞ்ச நேரத்திற்கு ஓய்வெடுங்கள் பயல்களா...! எஞ்சியிருக்கும் ஹெலிகாப்டரையும் கவனித்துவிட்டு வருகிறேன்!
ஹெலிகாப்டருள் இருந்த காவலர்களோ பயத்தில் வெலவெலத்துப் போயிருந்தனர்!
நாசமாய்ப் போற வலையை மீண்டும் சுடுகிறான்!
வலையினுள் வகையாகச் சிக்கிக்கொண்டது ஹெலிகாப்டர்! மீண்டும் ஒரு முறை ஸ்பைடரின் துப்பாக்கி முழங்க, இம்முறை உள்ளேயிருந்த காவலர்கள் பிடிபட்டனர்!
ஆ ஆ ஹ!
ஐயோ!
நான் மாட்டிக் கொண்டேன்!


பின்னர்...
ஆஹா! ஏகப்பட்ட மீன்கள் சிக்கியுள்ளன...பலே! பலே!
இனியாவது என்போன்ற மாமேதைகளுடன் மோத முயற்சிக்காதீர்கள், முண்டங்களா!
சர்ர்ர்ர்...


எற்கனவே காலியாக்கப்பட்டிருந்த தொரு அறையினுள் காவலர் அனை வரும் விட்டெறியப்பட்டனர்!
வாருங்கள், கதவு திறந்துதான் உள்ளது!
ஒரு எட்டு முன்வைப்பதற்கு முன்னர்...
சொல்லிக்கொள்ளாமல் கிளம்புவது நாகரிகமல்ல முட்டாளே!
ஸ்பைடரின் பிடிக்குள் வந்தபின்னர் தப்பிக்கவே முடியாது தம்பிகளா!...உங்களைப் பணயமாய் வைத்து ஆளுக்கு ஒரு கோடி டாலர் வாங்கப்போகிறேன்! ஹி ஹி!
உன் தலையில் இடி விழ!


எம்பயர் ஸ்டேட் பில்டிங்கிற்கான போராட்டத்தில் ஸ்பைடர் தீர்க்கமான வெற்றி கண்டதால், நகர மேயரின் அலுவலகத்தில் ஒரு அவசரக் குழு கூடியது!
ஹேய், என்ன இது...?



பட்டால் சுருட்டப்பட்ட அந்தக் கருவி, கண்ணாடியை உடைத்துக்கொண்டு, கார்பெட்டில் ஓய்வெடுத்தது...!
தீயணைப்புப் படையை வரச்சொல்லவா ?
அருகே செல்லாதீர்கள்! வெடிகுண்டாக இருக்கலாம்!




திடீரென அக்கருவி தீப்பிடித்தது!
ஆ ஆ... ஓடுங்கள்!
அது வெடிக்கவில்லை... கருநிற உலோகம் ஒன்று மட்டும் வெளியே வந்தது!
... அதன் மீது, ஸ்பைடரிடமிருந்து ஒரு செய்தி பொறிக்கப்பட்டிருந்தது!
"என்னிடம் பத்து காவலர்கள் பணயக் கைதிகளாக உள்ளனர்! இன்று நள்ளிரவுக்குள் 10 கோடி டாலர் பணத்தைத்தந்து, இவர்களைமீட்டுச் செல்லலாம்! அதுவரை எனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்கிறேன்". - ஸ்பைடர்!


நகரத்தின் முன்னணிப் பிரமுகர்கள் திகைத்து நின்றனர்!
இந்தப் படுபாவியைத் தடுக்க வழியே கிடையாதா?
இன்னொரு முறை ஹெலி காப்டரால் தாக்கினால் என்ன?
ராக்கெட் ஏவும் ஜெட்கள்?
பீரங்கிகள்?
அதோ பாருங்கள் கனவான்களே! எந்த ஹெலிகாப்டரும், சிறு ஆயுதங்கள் கொண்டு கட்டிடத்தை நெருங்க முடியாது! ... நீங்கள் சொல்வது போல முரட்டுத்தனமான ஆயுதங்களை, நகரத்தின் மையத்தில் பயன்படுத்துவது என்பதும் சாத்தியமல்ல...


பயங்கரமான போராட்டத்தைத் தொடர்ந்து, மக்கள் தம் வழக்கமான வேலைகளைச் செய்ய முற்பட்டு ஓரளவு வெற்றியும் கண்டனர்! ஆனால் பணத்தை பாங்குகளிலிருந்து மாற்றல் செய்யும் பொழுதோ...
BANK
ஆ ஆ-!
இ...ஈ...



...குண்டு துளைக்க முடியாத கண்ணாடிகளின் பலத்தில், நகைக் கடைகளில் வியாபாரம் நடந்த பொழுதோ, ஸ்பைடரின் கைவரிசையைக் காண முடிந்தது!
படார்!



நியூயார்க் நகரமே சோகமய
மாகியது!
...எங்கும் பீதி!
ஓடுங்கள்!
எல்லாவற்றிற்கும் நடுவிலோ—வெற்றிக்
களிப்பில் கும்மாளமடித்துக் கொண்டிருந்தான்
ஸ்பைடர்!
ஆகா! என்னிடம் செல்வம் உள்ளது...
சக்தியும் உள்ளது! என்னை ஒரு
பயலாலும் அசைக்க முடியாது!



ஆனால் மறுகணமே, ஸ்பைடரின் வாக்கை பொய்யாக்கும் வகையில், மாடியே ஆடியது! பின்னர் எம்பயர் ஸ்டேட் பில்டிங்கே ஆட்டம் கொடுத்தது!
ஆ ஆ ஆ!!



நகரம் முழுவதும் நில நடுக்கம் ஏற்பட்டது! ஸ்பைடரோ இரும்புத்தூணை இறுகப் பிடித்துக் கொண்டான்!
எ-என்ன நடக்கிறது? கட்டிடமே சாய்கிறதா? ஐயோ... என் புது வீடு இன்றோடு ஒழிந்ததா?


# அத்தியாயம் 2 நகரும் நகரம்




கப்பலின் காப்டன், விபரீதத்தைத் தவிர்க்க முயன்றார்...
இடதுபுறம் திரும்புங்கள்! ஊம்...



ஆனால் கப்பலின் எஞ்சின்களை விட, சுழல் வேகம் அதிக சக்தி கொண்டிருந்தது!


கப்பலின் முன்னேற்றத்திற்கு, சிமெண்ட் சாலைகள் ஒரு தடையாக அமையவில்லை!



திடீரென அதிர்ச்சி அலைகள் நகரைத் தாக்க, ஆழமானதொரு அகழி நடுரோட்டில் உண்டானது!!



கட்டிடங்கள் அதிர்ந்தன...
கண்ணாடிகள் நொறுங்கின...
செங்கலும், சுவர்களும்
மழையாய்ப் பொழிந்தது!
ஓடுங்கள்!
உலகமே அழியப்
போகிறது!
டமார்


அதே சமயம், எம்பயர் பில்டிங்கின் மறுபுறம்,
ஆற்று நீர் நகருக்குள் வெள்ளமாய் புகுந்தது!



இரயில் பாலங்கள், வெள்ளத்தின்
முன்னுல் ஈர்க்குச்சிகள் போல்
நொறுங்கின...
டமால்!



எம்பயர் பில்டிங், மத்தியில் கம்பீரமாய் நிற்க, அந்த
மன்ஹாட்டன் பகுதியே திடீரென நகரத் துவங்கியது...!
அந்த வேகத்தில், புகழ்வாய்ந்த ப்ரூக்லின் பாலம்
தெறித்துப் போனது!



நடுங்கிக் கொண்டிருக்கும் தன் பிடிமானத்திலிருந்தே, இரு பெரும் பாளங்கள், நகரத்தின் மையத்தைச் சுற்றி உருவாகிக் கொண்டிருப்பதைத் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்பைடர்!
ஹ்ம்ம்... புது மாதிரியான நில நடுக்கமாயிருக்கிறதே!... நகரத்தின் மையத்தைச் சுற்றி மட்டுமே வெடிப்பு ஏற்பட்டுள்ளது!


வேகமாக ஒன்றையொன்று நோக்கி வந்து கொண்டிருந்த வெடிப்புகள் சந்தித்த பொழுது, காட்டாற்று வெள்ளம்போல் ஏற்பட்டது.
46



ஆச்சர்யத்தில் மக்களெல்லாம் வாயடைத்து நிற்க, நகரத்தின் மையப்பகுதி, தொலைவில் நகர்ந்து கொண்டே சென்றது...
என் கண்களையே நம்ப முடியவில்லை!.. மன்ஹாட்டன் நகர்ந்து செல்கிறதே!


சிறு தீவு போல, மன்ஹாட்டன் மட்டும் கடலுக்குள் சென்று கொண்டிருந்தது!



எதிரே நின்று கவர்னர் தீவும் நகர்ந்து செல்லும
மன் ஹாட்டனும் மோத, கவர்னர் தீவு சின்னா
பின்னமாகியது!



அருகிலிருந்த லிபர்டி தீவுக்கும், உலகப் பிரசித்தி வாய்ந்த
லிபர்டி சிலைக்கும் அதே கதிதான் ஏற்பட்டது!
டமால்!


கடலில் மிதந்து சென்றுகொண்டிருந்த நகரினுள் இருந்த மக்களனைவரும் செய்வதறியாது திகைத்து நின்றனர் ஸ்பைடரின் கையாட்கள் உட்பட!
எ-என்ன நடக்கிறது பாஸ்?
என் அருமைப் பொக்கிஷமாம் நியூயார்க் நகரையே எவனோ திருடிச் செல்கிறானடா முட்டாள்!
ஆழ நடுக்கடலை நோக்கி மன் ஹாட்டனில் ஒரு துண்டு, மிதந்து கொண்டிருந்தது!
நாம் ஹெலிகார்களில் தப்பித்துச் சென்று விடுவோமா பாஸ்?
கூடாது மூடனே! நியாயமாய் நான் வென்ற நியூயார்க்கை எவனோ ஒருவன் திருடிச் செல்வதை எப்படி அனுமதிப்பது?
ஆக, நியூயார்க் நகருக்காக புதியதொரு போராட்டம் துவங்கியது!
நகரத்தின் இந்த ஒரு துண்டு மட்டும் மிதந்து செல்லக் காரணம் என்ன?
அது முக்கியமல்ல பெல்ஹாம்! ஒரேடியாக மிதந்து, நம் கையை விட்டுச் செல்லும் முன்னர் தடுத்தாக வேண்டும்!
49




ஸ்பைடரின் அற்புத வாகனமான ஹெலி-கார், வேகமாக உயரே பறந்தது...
என்ன செய்வதாகத் திட்டம் பாஸ்?
இரு கரைகளுக்கும் நடுவே ஒரு வலைத் தடுப்பு பின்னப் போகிறேன்! அதையும் தாண்டி என் நகரம் சென்றுவிடுமா பார்ப்போம்!
சில நிமிடங்களில் இரு கரைகளுக்குமிடையே ஸ்பைடரின் உறுதியான வலை பின்னப்பட்டது!
பெல்ஹாம், இந்த வலையில் என் விசேட ஃபார்முலாவைப் பயன்படுத்தியுள்ளேன்! ஒவ்வொரு நூலிழையும், பத்து எஃகுத் தூண்களின் உறுதியைக்கொண்டது... இதையும் மீறிச் சென்றுவிடுமானால் வேறு எந்த சக்தியாலும் என் நகரதைத் தடுக்க முடியாது!
நகர்ந்து வரும் நகரத்தையே தடுக்குமளவிற்கு இது உறுதியானதா பாஸ்?



சில நிமிடங்களில், மன்ஹாட்டன் தீவு,
வலைத் தடுப்பை எட்டியது!
ஹா, இப்பொழுது தெரிந்துவிடும் சங்கதி!


ஆனால் "சங்கதி" ஸ்பைடருக்கு சாதகமாக அமையவில்லை!
நகர்ந்துவரும் நகரத்தின் அசுர அழுத்தத்தை எதிர்த்த வலை,
நொடிப்பொழுதில் தெறித்துவிட்டது!



மின்னல் வேகத்தில் எதிர்த்துவந்த வலை, தன் படைப்பாளியையே மிரட்டியது!
நம் மீது பட்டால் சின்னாபின்னமாகி விடுவோம்!
நொடிப்பொழுதில், ஸ்பைடர் ஒரு சிறு பொத்தானைத் தட்ட, ஆரஞ்சு நிற ஜ்வாலையைக் கக்கியது ஹெலிகார்!
உலையிலிட்ட பஞ்சு போல, சாம்பலாகியது அந்த வலை!
அப்பாடா! இப்பொழுது தான் உயிரே வருகிறது!
ரொம்ப அலட்டிக்கொள்ளாதீர்கள் புரொபஸர்! நியூட்ரோ தீப்பந்தின் முன்னால் வலை பஸ்பமாகிவிடும் என்பது உங்களுக்குத் தெரியாதா?



தங்கு தடையின்றி நகரம் கடலினுள் சென்று கொண்டேயிருந்தது!
ஆண்டவனே, இனி என்ன செய்வது?
அதோ பாருங்கள், ஸ்பைடர்! நகரத்தையே கடத்தும் திருட்டு ராஸ்கல் இவனாகத் தான் இருக்கும்!
மிகவும் நூதனமான கொள்ளைகளை நடத்து வதில் ஸ்பைடர் கெட்டிக்காரன் தான்! ஆனாலும், முழு நகரத்தையே களவாடிச் சென்ற பெருமை அவனைச் சாராது!! பிரமிப்பூட்டும் இந்தக் கொள்ளையின் கர்த்தா... 'டாக்டர் நட்' என்று தன்னைத் தானே அழைத்துக் கொள்ளும் ஒரு விஞ்ஞானி!
அனைத்து இழுவை அணி-களுக்கும் தலைவரிடமிருந்து செய்தி! வேகத்தை ரேட் 9க்கு அதிகரியுங்கள்!



மெதுவாக உச்சரிக்கப்பட்ட அந்த ஆணையைச் செயல்படுத்த, கடல் நீருக்கடியில் விசித்திர எந்திரங்கள் பல, தம் எஞ்சின் வேகத்தை உடனே அதிகரித்தன!



அதே சமயம், பொங்கிக் கொண்டிருந்த கடல் அலைகள், மிதக்கும் நகரத்தின் மீது மோதி மேலும் பல கட்டிடங்களைத் தகர்த்தன!


மறு விநாடி, டாக்டர் நட்டின் கவனத்திற்கு வந்தது— அந்த விபத்து!
இழுவை ராக்கெட் 772 ஐ, ரிப்பேர் யூனிட்கள் கவனிக்கவும்! 772 ன் இடத்தை, தயார் நிலையில் உள்ள வேற்று ராக்கெட் நிரப்பவும்!
772
மறுகணமே டாக்டர் நட்டின் ஆணை செயல்படுத்தப்பட்டது!


சேதமுற்ற இயந்திரம், ரிப்பேர் யூனிட்டுடன் செல்ல, அதன் இடத்தில புதிய ராக்கெட் பணி புரிந்தது!



விபத்துக்குள்ளாகிய இயந்திரம், தானியங்கி நகருபாதையின் மீது இறக்கப்ப ட, சோதனைக் கூடத்திற்குள் இட்டுச் செல்லப்பட்டது...


அங்கே சேதமுற்ற பாகங்கள் கழற்றப்பட்டு சோதனை செய்யப்பட்டன!


ஆக, ஐந்து நிமிடங்களுக்குள் 'டாக்டர் நட்' டிற்கு விளக்கம் கிடைத்தது!
ராக்கெட் 772 ன் சேதத்திற்குக் காரணம், உடைந்த வெளித் தகடுகளும், உள் ஸ்குருக்களும்தான்! பழுது பார்ப்பதற்குத் தேவை - நாற்பது நிமிடங்கள்!
ரிப்பேர் கூடத்திற்கு டாக்டர் நட்டின் செய்தி! உடனடியாக பழுது பார்க்கவும்!
அதே சமயம், மிதக்கும் நகரத்தின், மிக உயரமான கட்டிடத்தில் நகர மேயரும், முக்கிய பிரமுகர்களும் கூடியிருந்தனர்!
...அப்படியானால் நம் முதல் வேலை மன்ஹாட்டன் பகுதியில் சிக்கியிருக்கும் சுமார் 30 லட்சம் மக்களை தப்பிக்க வைப்பதே!


நேரடியாகவோ, அல்லது கையாட்கள் மூலமாகவோ இக்கொள்ளையை நடத்துவது ஸ்பைடர் தான் என்ற ஊகத்தில், அவனை ஒழித்துக் கட்டும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன் காப்டன் லெய்னிஸ்டர்!
ஆகட்டும் ஸார்!
அதே சமயம், சில மாடிகளுக்கு மேல் ஸ்பைடர் பெரிதும் வருந்திக் கொண்டிருந்தான்!
போச்சு! போச்சு! உலகின் மிக அரிய பொக்கிஷம் என் அருமைக் கைகளிலிருந்து போய்விட்டது!


தவறான நேரத்தில் நுழைந்த ஆர்டினி, ஸ்பைடரின் சிந்தனையைக் கலைத்தான்!
ப-பாஸ், போலீசார் மீண்டும் வந்து விட்டனர்! என்ன செய்வது?
போலீஸ், போலீஸ் என்று உயிரை எடுக்காதே மடையா!
நாம் கவலைப்படவேண்டியது அதைக் கண்டு! பார்!



அந்தக் கப்பல்களைப் பார்த்தாயா ஆர்டினி? இந்தத் தீவிலிருந்து மக்களை மீட்டிச் செல்வதற்காக வந்துள்ளன. மக்களோடு, அவர்களின் நகையும், பணமும் சேர்ந்து போய்விடும்...


...அதன் பின்னர், ஆளில்லா இந்தத் தீவில் நான் ஆட்சி புரிய வேண்டியதுதான்! வெகு விரைவில், நான் ஒரு பூஜ்யமாகி விடுவேன்!


அத்தியாயம் 3 'டாக்டர் நட்'





மயிர்க்கூச்செறியும் வகையில், ஸ்பைடர் மேல்மாடியிலிருந்து பாய்ந்தான்...
நகருங்கள்... நகருங்கள்! மீட்புப் படைகள் சிறிது நேரத்தில் வந்துவிடும்!
மிதக்கும் நகரத்தைவிட்டுத் தப்புவதிலேயே மக்களெல்லாம் குறியாகயிருந்ததால், கரிய உருவம் ஒன்று நீரினுள் விழுவதை எவரும் கவனிக்கவில்லை!
இன்னும் மூன்று பேர் மட்டும் ஏறலாம்... லாரி, அடுத்த முறை உங்களை ஏற்றிக் கொள்கிறேன்...
தொபுக்!



நீருக்கடியில் நீந்தியவாறே
நோட்டமிட்டான் ஸ்பைடர்!
இது என்னது-
வெள்ளையாக?


கத்தியால் பரிசோதித்துப்
பார்த்தான் ஸ்பைடர்!
கெட்டியான, காற்றடைத்த நுரை!
பிரமாதமாக மிதக்கும்.. அதனால்
தான் என் நகரம் மூழ்காமல்
மிதக்கின்றதோ!


அப்பொழுதுதான் இழுவைக் கம்பிகளையும், ராக்கெட் களையும் ஸ்பைடர் பார்த்தான்! தகரம் மிதந்து ஒடுவதற்கான காரணம் அவனுக்குப் புரிந்தது...
வாவ்!! இவ்வளவு பயங் கரக் கொள்ளைக்குத் திட்டம் வகுத்தவன் பலே கில்லாடி யாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் ஸ்பைடரின் முன் அவன் பொடிப் பொடியாகப் போகிறான்!
581
அப்பாடி! நூற்றுக்கணக்கான ராக்கெட்கள்!.. ஒவ்வொன்றும் அதி நவீனக் கருவிகள்! இவற்றின் இழுவை சக்தி பிரம்மாண்டமாய் இருக்க வேண்டும்!


ஸ்பைடர் கணித்திருந்ததைவிட அதிக ஆற்றல் கொண்டவையாய் இருந்தன அந்த ஆழ்கடல் ராக்கெட்கள்!
ராக்கெட் 581 லிருந்து டாக்டர் நட்டிற்கு செய்தி: அருகாமையில் நீந்திவரும் மானிடனால் கண்காணிக் கப்படுகின்றேன் - என்ன செய்வது?
581
கண்காணிப்பாளனை காலிசெய்து விடலாம்!


உத்தரவு பிறப்பிக்கப்பட்டவுடன், ராக்கெட் 581, இழுவைக் கம்பிகளிலிருந்து கழன்று கொண்டு, ஸ்பைடரை நோக்கித் திரும்பி...


...அசுர வேகத்தில் பாய்ந்து வந்தது!
ஆ ஆ ஷ்!


ஸ்பைடரின் அசாத்திய திறமை மட்டுமே, மரணத்திலிருந்து அவனைக் காப்பாற்றியது!
67


F-6


ஆனால் ராக்கெட்டின் காற்றுடிகள் ஏற்படுத்திய சுழலின் பிடியில் ஸ்பைடர் சிக்கிக்கொண்டான்!
சற்று நேரத்தில் சுழல் தளர்ந்தது.— ஆனால் புதியதொரு தொல்லே, மூன்று ராக்கெட்டுகள் வடிவில் தோன்றியது!
ஆண்டவனே! கூட்டமாய் சேர்ந்து என்னே நசுக்க முயற்சி செய்கின்றனவே இவை!!


தன் வேகத்தால் அவற்றை முறியடிக்க முனைந்தான் ஸ்பைடர்! ஆனால் ராக்கெட்களோ ஆழ்கடலில் அவனை விடவும் வேகமாக நகர்ந்தன!
இவற்றை முந்த முடியாது!
ஆகையால், மாற்றுத் திட்டத்துடன், ஒற்றையாக வந்த ராக்கெட்டை நோக்கி பாய்ந்தான் ஸ்பைடர் - வலைத் துப்பாக்கியுடன்!
ஆஹா! நாசக் கருவிகளில் ஒன்று தொலைந்தது!


ஆனால் மீதி இரண்டு ராக்கெட்களையும் ஒரே நேரத்தில் தோற்கடிக்க முடியாது என்பதை ஸ்பைடர் உணர்ந்தான்!
பார்வையாலோ, ரடார் மூலமாகவோ இவை என்னைப் பின்தொடர்கின்றன... கருப்பு நிற உலோகத் தூசல் புகைமுட்டம் ஏற்படுத்தினால், இருவகைப் பார்வைகளும் செயலழிந்து விடும்!
கருநிற உலோக முட்டம் ஸ்பைடரின் முதுகிலிருந்து சீற, இருளில் இரு ராக்கெட்களும் மோதின!


ஸ்பைடரிடம் உங்கள் ஜம்பம் பலிக்காது தம்பிகளா!
டாக்டர் நாட்டிற்கு உடனடியாகத் தகவல் பறந்தது...
581லிருந்து சேதி: எனக்கு பலத்த சேதாரம் ஏற்பட்டுள்ளது! 554-ம் 555-ம் வெடித்து விட்டன. மானிடனைக் காணவில்லை!
581
மீட்பு அணிகள் அனைத்தும் 581 ஐ கவனியுங்கள்! இதர ராக்கெட்களுக்கு உத்தரவு - நீந்தும் மானிடனைக் கண்டால் உடனே ஒழித்துக் கட்டவும்.
ஆனால் இம்முறை ஸ்பைடர் ஏமாறவில்லை! ராக்கெட்டுகளின் கண்ணில் படாமல் தூரத்திலிருந்தே பார்வையிட்டான்!
இந்த இயந்திரப் பட்டாளத்தை எதிர்த்துப் போரிடுவதில் பலனில்லை.. இவற்றைப் பின்னிருந்து இயக்கும் தலைவனைக் கண்டுபிடித்து அவனை ஒழிக்க வேண்டும்!


சேதமுற்ற ராக்கெட் எங்கே செல்கிறது என்பதைத் துப்பறிந்தால், தலைவனைக் கண்டுபிடித்துவிடலாம் எனத் தீர்மானித்தான் ஸ்பைடர்!
ஹா! இந்த நுரைக்கு ஒரு நுழைவாயில் உள்ளதோ?!
உஷாராகப் பின்தொடர்ந்தான் ஸ்பைடர்...
அன்னியர்களை விரட்ட காவலாளிகளோ, முன்னேற்பாடுகளோ இருப்பதுபோல் தெரியவில்லையே!


ஆனால் ஸ்பைடரின் கணிப்பு தவறானது! கண்மூடாமல், நுழைவாயினை பல இயந்திரங்கள் கண்காணித்து வந்தன....!
திரும்பிய இடமெல்லாம் இயந்திர மயமாய் இருக்கிறதே! இவற்ருலும் பேசவோ பார்க்கவோ முடியுமா?!
இரண்டையுமே செய்யக்கூடியவை அந்த இயந்திரங்கள்!
நான்காம் பட்டறையிலிருந்து டாக்டர் நட்டிற்கு செய்தி: அன்னிய மானிடன் ஒருவன் ஊடுருவியுள்ளான் - உங்களது ஆணைகள் என்ன? - அவசரம்.
உடனடியாக அவனைப் பிடிக்கவும் - உயிரோடு அல்லது பிணமாக!


அனைத்து அணிகளுக்கும் டாக்டர் நட்டின் உத்தரவு - நான்காம் பட்டறையில் தென்பட்ட அன்னியனைப் பார்த்தால் உடனே பிடிக்கவும்!
அதே சமயம் ஸ்பைடர் மீதான தாக்குதல் துவங்கியிருந்தது - இரு உச்சவேக டிரில்லர்களின் உருவத்தில்!
அட! வேலை செய்வதோடு மட்டுமல்லாமல் சண்டையும் போடுமோ இவை!... வரட்டும் நல்லதொரு பாடம் கற்பிக்கிறேன்...
ஹா! என் எதிர்பார்ப்புக்கள் பொய்யாகவில்லை... தற்காப்புக்குத் துளியும் தயாராக இல்லாத ஜடங்கள் இவை!


திடீரென இயந்திரத் துப்பாக்கியின் ஒலியுடன், பழுக்கக் காய்ச்சிய உலோக ரவைகள் காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்து வந்தன...
ஆஆஆ! பதிலுக்கு சுடவும் தெரியுமோ இவற்றிற்கு!
இந்தக் கொலைகாரக் கருவிகளை ஒழிக்க, வலைத் துப்பாக்கி பயன்படாது...! ஒளிந்துகொள்வதற்கு இடமும் இல்லாததால்...


.. வேங்கை போல பாய்ந்துதான் தப்பிக்க வேண்டும்!
கொடிய ரவைகளை உஷ்ணத்துடன் உமிழ்ந்து கொண்டிருந்ததொரு இயந்திரத்தின் மீதே ஸ்பைடர் தொற்றிக்கொள்ள, ஒன்றை யொன்று சுட்டுக்கொண்டன இயந்திரங்கள்!
உங்களுக்குள்ளேயே அடித்துக்கொள்ளுங்கள் முண்டங்களே!


மறுகணம், ஒரு இயந்திரம் சுக்கல் சுக்கலாக வெடித்தது! இன்னொரு இயந்திரத்தை கடலினுள் எட்டி உதைத்தான் ஸ்பைடர்!
ஹா! ஹா! நன்றாக குளியல் போடு சனியனே!
ஆனால் சற்றும் எதிர்பாராமல் வகையாக மாட்டிக்கொண்டான்!
ஊ.. ஊ! இது என்ன புதுச் சோதனை?
77



இரும்புக் கரங்களின். உடும்புப் பிடியில் திணறினான்!
ஆஆவ்! தப்புவதற்கே வழியில்லை!... நான் செத்தேன்!... இத்தனை காலத்திற்குப் பின் ஒரு அற்ப இயந்திரத்தின் கையிலா சாக வேண்டும் ?!
அப்பொழுதுதான் தன்னை நோக்கி வந்த ஜ்வாலைகளின் உஷ்ணத்தை உணர்ந்தான் ஸ்பைடர்!
ஐயையோ! பாழாய்ப் போகும் இயந்திரங்களுக்கு முடிவே கிடையாதா?



ஆனால், ஜ்வாலைகள் தன் நெஞ்சை குறிகொண்டிருந்த பொழுதிலும் ஸ்பைடர் கலங்கவில்லை! ஏனெனில்-
ஹா!ஹா! தீயால் துளைக்க முடியாத என் ஆடையிருக்கும்வரை என்ன கவலை?
அப்பொழுது தான் எதிர்த் தாக்குதலைத் துவக்கினான் வலை மன்னன்!
இப்பொழுது...
... இந்த ராட்சசக் கரங்களாலும் தீயைத் தாங்க முடியுமா என்று பார்ப்போம்!



இயந்திரத்தின் நுணுக்கமான பாகங்களெல்லாம் உக்கிரமான தீப்பிளம்பின் முன்னர் இளகி ஓடின! ஸ்பைடரின் மீதிருந்த பிடியைத் தளர்த்தின இரும்புக் கரங்கள்!
ஹிஹி! மீண்டும் ஸ்பைடருக்கே வெற்றி!


ஒழிந்து போங்கள்!


பட்டறையிலிருந்த இதர இயந்திரங்கள், ஸ்பைடருக்கு எவ்வித இடைஞ்சலும் தரவில்லை!
இனியாவது அற்ப இயந்திரங்களுடன் மாரடிக்காமல் இவற்றின் பின்னாலுள்ள மூளையைக் கண்டுபிடிக்கலாம்!
ஆனால்—
ஆஆஹ்!



ஸ்பைடரின் அற்புத வேகம் மட்டுமே
அழிவிலிருந்து அவனைக் காப்பாற்றியது!
பொத்!
துள்ளிய வேகத்தில், 'பொத்தென'
தரையில் விழுந்தான்.
மறுகணம், அவனெதிரேயிருந்த சுவர்கள்
விலகி வழிவிட்டன!
ஆஹாஹா! இந்த அலிபாபா
குகைக்குள் நுழைவதற்கான வ
இது தானோ?! அல்லது எனக்கு
விரிக்கப்பட்ட வலையா?!



வா! வா! என்று ஸ்பைடரை அழைத்தது அந்த வாயில்!
நேர் பாதையான இந்தக் குகையில் எந்த அபாயமானாலும் முன்னதாகவே கண்டு கொள்ளலாமே!


ஆனால் டாக்டர் நட்டின் கண்காணிப்பாளர்களோ எல்லா இடங்களையும் ஆக்கிரமித்திருந்தனர்!


உள்க்காவல் 20 லிருந்து டாக்டர் நட்டிற்கு செய்தி: அன்னியனை ஆல்ஃபா ப்ளூ குகையில் கண்டுவிட்டேன்! உங்கள் உத்தரவு என்ன ?
தாக்கு!
மறுகணமே, ஒற்றைச் சக்கரம் சீறிப் பாய்ந்தது ஸ்பைடரை நோக்கி!
ஈஈஈ - இது என்ன கொடுமை ?
'விஷ்' என காற்றைக் கிழித்துச் சென்றது அந்த இயந்திரம்— சிறு சிறு தோட்டாக்களைப் பொழிந்தவாறே!
விஷ் ஷ்!



முனையில் ஏதோ உள்ளதே... விஷமாகத்தான் இருக்கும்... நல்ல காலம், எவையுமே இலக்கைத் தாக்கவில்லை!
சீறிச் சென்ற ஒற்றைக்கால் கருவி மீண்டும் தன்னை நோக்கி வருவதை ஸ்பைடர் விரும்பவில்லை. அதனால்..
ஹா! இந்த வலையைத் தாண்டி எதுவும் வரமுடியாது... இனி பின்பக்கத்திலிருந்து எந்தத் தொல்லையும் வராது!


சில கெஜ தூரத்திற்குப் பின், குகை இரண்டாகப் பிரிந்தது!
ஐயோ, இதில் எந்தப் பாதையில் செல்வது? தெரியவில்லையே...


ஸ்பைடர் வீணாய் கவலையுறத் தேவையில்லை! ஏனெனில் அந்த ஆழ்கடல் நகரில் அனைத்து தீர்மானங்களையும் உருவாக்குவது டாக்டர் நட் மட்டுமே!
நுரையிஷின் ஏழுக்கு டாக்டர் நட்டிடமிருந்து ஆணை— டெல்டா ப்ளு குகையை உடனே அடைக்கவும்!



இரண்டில் ஒரு பாதை நுரையால் அடைக்கப்பட்டதால், எஞ்சியிருந்த பாதையில் செல்வதைத் தவிர வேறு வழியில்லை...
உடனே —
ஒவ்வொரு முறை குகையில் பிரிவு ஏற்பட்டபொழுதும்- இதே போல் நடந்தது!
குறிப்பிட்ட திசையில் என்னை செல்ல வைப்பதற்காக தீட்டப்பட்ட திட்டமிது! எதற்காக...?



சில நிமிடங்களுக்குப் பின்னர் —
ஆவ்! எல்லாப் பாதைகளும் அடைபட்டுள்ளனவே!
மறுகணம்—
எ-என்ன இது...?


நொடிப்பொழுதில், எஃகுச் சிறை ஒன்று தன்னை சூழ்ந்துகொண்டதை உணர்ந்தான் ஸ்பைடர்!
சுண்டு விரலைக்கூட அசைக்கமுடியவில்லையே! என்ன செய்வது ?


அப்பொழுது எதிரிலிருந்து நுரைச் சுவர் கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ந்து...
மை காட்!


...நியூயார்க் நகரையே திருடிய எத்தனின் தரிசனத்தை ஸ்பைடருக்கு வழங்கியது!
வருக, வருக, மிஸ்டர் ஸ்பைடர்!
என்னை உனக்குத் தெரிந்துள்ளது ...ஆனால் எனக்கு உன்னைத் தெரியவில்லையே! யார் நீ?
ஹா! நான் தான் டாக்டர் நட்! உன்னுடைய அவல நிலையை உருவாக்கிய மாமேதை!... செருக்குப் பிடித்த நியூயார்க் நகரத்தையே நெம்பி, கடலுக்குள் இழுத்துச் செல்லும் அபார விஞ்ஞானி நான் தான்!


முப்பத்தைந்து வருட அயரா உழைப்பின் பலனாக, நியூயார்க்கே என் உள்ளங்கைக்கு வந்துவிட்டது! அன்று என்னைப் பார்த்து சிரித்த மடையர்களெல்லாம் இன்று கதறி நிற்கின்றனர்... டாக்டர் நட்டின் சபதம் நிறைவேறும் நாள் இன்று தான்!
"...இருபது வயது இளைஞனாக நானிருந்தபொழுது அற்ப குமாஸ்தாக்கள்கூட என்னைப் பார்த்துச் சிரித்தனர்..."
CITY PATENT OFFICE


"".. காரணம், என்னுடைய புரட்சிகரமான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் மகிமை, அம்மண்டுகளின் மூளைக்கு எட்டவில்லை!...''


"...என்னை விரட்டியடித்து, கேவலப்படுத்தினார்கள் அந்த அற்பர்கள்!...''


"... என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்த நியூயார்க் நகரையே ஒருநாள் அழவைப்பதாக அன்றுதான் சபதமிட்டேன்!"
என் வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவழித்தாவது என் சபதத்தை நிறைவேற்றி விட்டேன்! அஹ்ஹா!!



ஆல் ரைட், நட்! உன் சபதம் தான் நிறைவேறிவிட்டதல்லவா? நியூயார்க் நகரமே அழுதுகொண்டிருக் கிறதே! இனி என் சொத்தை என்னிடமே கொடுத்துவிடு!
ஓ, நோ! இந்த நகரமே காலியான பின்னர் - சாலைகளில் நான் மட்டுமே நடக்கவேண்டும்! நாராசமான சிரிப்பொலி என் காதில் விழாமல், நிம்மதியாய் இருக்கவேண்டும்!
சரி, என்னைப் போகவிடு, நட்.. உன்னை நான் தடுக்கமாட்டேன்! சத்தியமாக தடுக்கமாட்டேன்!
ஹா! குற்றவாளியின் வார்த்தையை நான் நம்பவா? எனக்கு எந்தவிதமான குற்றமும் பிடிக்காது... சட்டத்தின் பிடியில் உன்னை சிக்கவைக்கப் போகிறேன் மிஸ்டர் சிலந்தி!
94



மைக்ரோ:ஃபோனினுள் டாக்டர் நட் மெதுவாகப் பேசினான்! சற்று நேரத்திற்கெல்லாம் போலீஸுக்கு செய்தி பறந்தது...
காப்டன் லெய்னிஸ்டர், தலைமையகத்திலிருந்து செய்தி... யாரோ ஒரு பரோபகாரி ஸ்பைடரை நம்மிடம் ஒப்படைக்கப்போகிறானாம்...
நிஜமாகவா?



தக்க நடவடிக்கைகள் உடனே எடுக்கப்பட்டன!
செய்திப்படி இந்த இடத்தில்தான் ஸ்பைடர் ஒப்படைக்கப்படுவானாம்! செய்தி பொய்யாகவே இருந்தாலும் கூட, வெகு எச்சரிக்கையாய் இருப்பது நல்லது.
95


போலீஸார் ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டிருந்த பொழுது, 'பிளாட்பாரம் வெடித்தது!
டமால்!
உடனே—
ஸ்பைடர் கூண்டில் அடைக்கப்பட்ட குரங்குபோல மாட்டிக்கொண்டான்!
அந்த அவல நிலையிலும் ஸ்பைடரால் தன் கைபிடுக்கிலிருந்த சிறு பொத்தானை அமுக்க முடிந்தது...
ஓ.கே ஸ்பைடர்! உன்னை அனுப்பி வைத்தது யார் என்பது தெரியாது, ஆனால் அவருக்கு எங்கள் நன்றி!
இன்னும் எவ்வளவு நேரம் கொக்கரிக்கிறாய் என்று பார்ப்போம்! என் ஹெலி-கார் வந்து கொண்டேயிருக்கிறது!



மடையர்களை
தூங்க வை,
பெல்ஹாம்...!


மறுகணம், ஹெலி-காரிலிருந்து
வெள்ளைப் புகை பீச்சியடிக்கப்பட்டது!...
காவலர் அனைவரும் சுருண்டனர்!
ஆஆஆ!


போலீஸார் கண்ணில் மண்ணைத் தூவிய பின்னர், ஹெலிகாரிலிருந்து கொக்கிகள் வெளிப்பட்டன...
அப்படியே எம்பயர் பில்டிங்கிற்கு சென்று, அங்கே பாஸை விடுவித்துக் கொள்ளலாம்!



ஆத்திரமடைந்த ஸ்பைடர் எரிமலை போல குமுறிக் கொண்டிருந்தான்...
எ - என்ன தான் நடந்தது பாஸ்?
கேள்விகள் கேட்டு நச்சரிக்காதே முண்டம்!

## அத்தியாயம் 4 'எத்தனுக்கு எத்தன்'






F-5


...ஆம்! நியூயார்க்கின் வெறிச்சோடிய சாலைகளில் ஒரு குட்டையான, வெள்ளையங்கி அணிந்த உருவம் உலாவிக்கொண்டிருந்தது!
என்னைப் பார்த்து சிரிப்பதற்கு இனி நியூயார்க்கில் ஆள் கிடையாது! நாராசமான சிரிப்பொலியின் உபத்திரவமின்றி நான் நடக்கலாம்! சிரிப்பை நான் நிறுத்திவிட்டேன்!



ஆனால்...ஆனால், சுழற்றியடிக்கும் காற்றோடு மிதந்து வந்தது ஒரு சப்தம்...
ஹா ஹா ஹா!


டாக்டர் நட்டின் முதுகுத் தண்டை சில்லிட வைக்கும் ஒரு சப்தம்...
ஹா ஹா!
ஹி ஹி ஹி!
ஹோ ஹோ!
சந்து பொந்திலிருந்தெல்லாம் எழுந்த அந்த இடிகுரலை அடையாளம் காண முனைந்தான் அந்த குட்டை மனிதன்!
நிமிடத்துக்கு நிமிடம், சிரிப்பொலி அதிகரித்துக்கொண்டேயிருந்தது! ஆனால் அதனை எழுப்பும் எத்தனைக் காணவே முடியவில்லை!



நிறுத்து! நிறுத்து! நிறுத்து!
ஹா,, ஹா!
ஹா ஹா!
ஹோ ஹோ!


டாக்டர் நட் ஓடினான்... ஓடினான்... ஓடிக்கொண்டேயிருந்தான், திடீரென...
ஆ ஹா! ஹா!...என்னை போலீஸாரிடம் ஒப்படைக்க நினைத்த சுண்டைக்காயைப் பார்! ஹோ! ஹோ! ஹி! ஹி!
நீ - நீயா... ஸ்பைடர்!


அவமானத்தால் துடித்த டாக்டர் நட், தன் பாக்கெட்டிலிருந்து ஒரு மைக்ரோ ஃபோனை உருவினான்!
டாக்டர் நட்டின் அவசர உத்தரவு!... என்னருகே மானிட எதிரி இருக்கிறான் உடனடியாகத் தாக்கவும்!
மறுகணம், மூலைமுடுக்கிலிருந்தெல்லாம் டாக்டர் நட்டின் கொலைக் கருவிகள் முளைத்தன!
ஹி! ஹி! இவற்றால் என்னைத் தடுக்க நினைக்கிறாயா? பார் - வேடிக்கையை!


நொடிப்பொழுதில், ஒற்றைக்கால் இயந்திரங்கள் அனைத்தையும், தன் வலையால் பிணைத்தான் ஸ்பைடர்!
உன் இயந்திரப் படைக்கு ஏற்பட்ட கதி தான் உனக்கும் நட்!


ஆனால் டாக்டர் நட்டோ, ஸ்பைடரின் யுக்திகளை எதிர்க்கத் தயாராக இருந்தான்!
உன் ஜம்பம் இனிப் பலிக்காது ஸ்பைடர்!...மின்சாரத்தால் உன் வலையை பொசுக்கக் கற்றுக் கொடுத்துவிட்டேன் என் நண்பர்களுக்கு! உன் கொட்டம் அடங்கப்போகிறது!
ஸ்ஸ்..!



ஆனால் ஸ்பைடர், தன் வலைத் துப்பாக்கியை, லாவகமாக அழுத்த, கரும்புகை பீச்சிட்டது!
என்னுடைய மற்றொரு கண்டுபிடிப்பான அமிலப் புகையை எதிர்த்து உன் இயந்திரங்கள் தூள் தூள்!


ஹா! ஹா! ஹா!
சிரிக்காதே! என்னால் சகிக்க முடியவில்லை! சிரிக்காதே!


சற்றே சுதாரித்துக்கொண்டு, புதிய ஆணைகளை டாக்டர் நட் பிறப்பித்தான்!
வெட்டும் அணி 8-9-10 க்கு டாக்டர் நட்டின் உத்தரவு! 90 டிகிரியில் தரையை பெயர்த்தெடுங்கள்!



அந்த ஆணையின் பயனாக




ஹா! ஹா, என் காலடியில் பள்ளம் ஏற்படுத்தலாம், நட்! ஆனால் ஸ்பைடரை அவ்வளவு எளிதில் சிக்க வைக்க முடியாது!


முதுகிலுள்ள ஜெட்களின் உபயோகத்தால், பறந்துசென்று மூன்றுமாடிக் கட்டிடத்தின் ஜன்னலில் தொற்றிக் கொண்டான் ஸ்பைடர்! நட்டிற்கு ஆத்திரம் உண்டாக்கும் வகையில் கிண்டல் செய்துகொண்டே இருந்தான்!
ஹா! ஹா! ஹா! என்னை ஒருநாளும் பிடிக்கமுடியாது சுண்டைக்காய்! ஹி! ஹி!



திடீரென கட்டிடத்தின் கீழ்த்தளத்திலிருந்து போலீஸார் பாய்ந்து வந்தனர்...


நேராக பால்கனிக்குச் சென்றனர்...
நகரம் முழுவதுமே காலியாகி விட்டது என்றல்லவா நினைத்தேன்? ஆனாலும் பரவாயில்லை! இந்த நச்சு வாயு இவர்களின் கணக்கை முடித்துவிடும்!



ஆனால் நச்சு வாயுப் பிரயோகம் பலனளிக்கவில்லை!
ஏதோ தில்லு முல்லு நடந்துள்ளது! நச்சு வாயுவை சுவாசித்த பின்னரும் எப்படி இவர்களால் செயல்பட முடிகிறது?!



உடனே ஸ்பைடர் மாற்றுத் தாக்குதலை துவக்கினன்...தன் மண்டையை ஆயுதமாய்க் கொண்டு!
இது எப்படி இருக்கு மரமண்டைகளா ?
டொம்!


அப்பொழுதுதான், விஷப் புகை பலனில்லாது போனதற்குக் காரணம் புரிந்தது!
ஓஹோ! போலீஸ் காரர்களெல்லாம், நட்டின் இயந்திரப் படைப்புகள் தானா?...



தன் ஹெலி-காரை வரவழைத்து, ஒரே பாய்ச்சலில் தொற்றிக்கொண்டான் ஸ்பைடர்...
உன்னோடு நல்ல வேடிக்கையாகத் தான் உள்ளது நட்! சற்று ஓய்வெடுத்த பின்னர் உன்னைப பார்க்க வருகிறேன்! டா டா!



ஹா! ஹா! ஹா! ஹோ! ஹோ!
நிறுத்து! நிறுத்து! நாசமாய்ப் போறவனே! சிரிப்பை நிறுத்து!



கோபாவேசத்தில் நட் கொதித்தான்! ஹெலி-கார் கிளம்பவிருந்த சமயம், ஒரே பாய்ச்சலில், அவனும் தொற்றிக்கொண்டான்...
சிரிக்காதே! சிரிக்காதே!
ஏய்!


உயரே... வெகு உயரே... ஹெலி-கார் பறந்துகொண்டே செல்ல, இரு வில்லன்களும், கட்டிப் புரண்டு கொண்டிருந்தனர்!



திடீரென ஸ்பைடர் வெளியே விழுந்தான்!
செத்தொழி சிலந்திப் பயலே! ஒழிந்து போ! போ!
ஆனால் ஸ்பைடர் அவ்வளவு சுலபத்தில் சாகத் தயாராக இல்லை!
எ-என்ன ஆச்சு பாஸ்?
ஹெலி-காரை பறித்துக்கொண்டானே!
ஆமாம் மடையர்களே .. வேண்டுமென்றே நான் தான் வெளியே விழுந்தேன்! ..இந்த நட் பயலுக்கு சமாதிவைக்க, என் ஹெலி-கார் தான் ரொம்ப சவுகரியம்!



மறுகணம், உலகின் மிக உயரமான கட்டிடத்தினுள் அமைத்திருந்த கண்ட்ரோல் - ரூமுக்குள் ஸ்பைடர் புகுந்து கொண்டு, ஹெலி-காரை இயக்கினான்... ஹெலி-காரும், உடனே அட்லாண்டிக் சமுத்திரத்தினுள் மூழ்கியது!
எ-என்ன நடக்கிறது?
தெரியவில்லை... ஆனால் டாக்டர் நட் நல்லதொரு பாடம் இன்று படிக்கப் போகிறார்!


ஆனால் டாக்டர் நட்டின் உதவிக்கு, அவரது இயந்திரப் படை விரைந்தது!
இந்த ஹெலி-கார் முழுக்க முழுக்க ஸ்பைடரின் ஆதிக்கத்தில் உள்ளது... ஆனால் கம்ப்யூட்டர் மூளை கொண்ட என் இயந்திரங்கள் இதனை முறியடித்துவிடும்!



ஆழ் கடலை நோக்கி அசுர வேகத்தில் பாய்ந்த ஹெலி-காரை விரட்டி, இழுவை ராக்கெட்கள் பறந்தன...


விசித்திர ஊர்வலம், மேன்மேலும் ஆழப் பகுதியை நோக்கிச் சென்றது. துளியும் ஒளியில்லாத நீரில், டாக்டர் நட் புது ஆணைகளைப் பிறப்பித்தான்!
அனைத்து இழுவை அணிகளும், உச்ச வேகத்தை அணுகலாம்!... இது உத்தரவு ..


...ஆனால், ஆழமும், இருளும் அதிகரித்துக்கொண்டே செல்ல, நீரின் அழுத்தமும் பன்மடங்கு அதிகரித்துக் கொண்டே சென்றது! அதன் முதல் பலி ஒரு ராக்கெட்!


தொடர்ச்சியாக இதர ராக்கெட்களும் அப்பளமாய் நொறுங்கிப் போயின...ஸ்பைடரின் நையாண்டிக் குரல், ஹெலி-காரினுள் எதிரொலித்தது...
உன்னுடைய கருவிகளின் கதியைப் பார்த்தாயா நட்?... இன்னும் சற்று நேரத்தில் நீ நிற்கும் என் ஹெலி-காரும் அதே போல நொறுங்கப்போகிறது!
நோ! உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்...உன் நகரத்தைத் திருப்பித் தந்துவிடுகிறேன்! என்னைக் காப்பாற்று!


அப்படி வா வழிக்கு!... முதலில் உன் இயந்திரங்களின் செயல்பாட்டு முறையை என்னிடம் விளக்கமாகச் சொல்!
ஊம்! எதையும் விட்டுவைக்காமல் முழுவதையும் சொல்!
ஆ-ஆகட்டும்! என்ன வேண்டுமானாலும் செய்கிறேன்! என்னை சாகடித்துவிடாதே, ஸ்பைடர்!


ஸ்பைடரின் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளித்தான் நட்!.. சற்று நேரத்தில்...
ஹேய், நகரம் திரும்பிவருகிறது!...


ஆனால் இம்முறை இழுவை அணிகளை இயக்கியதோ ஸ்பைடர்!
அற்புதமான கண்டுபிடிப்பு இந்த நுரை! கல் போல கனமானது...அதே சமயம் கார்க் மரத்தைவிட ஆயிரம் மடங்கு அதிக மிதவை சக்தி கொண்டது!
நகரத்துக்கடியில் குழிபறித்து, மண்ணிற்குப் பதிலாக நுரையால் நிறைத்துள்ளான் பயல்!
வாயை மூடுங்கள்! நான் பிணியாக இருப்பது தெரியவில்லையா ?


ஒரு வழியாக, துண்டு நகரம், மீதிப் பாதியுடன் இணைந்தது... அதாவது இணைக்கப்பட்டது! மேயர் அலுவலகத்தில்...
நியூயார்க்கை திருடிய எத்தன் இவன்தான்! இவனை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்! எனக்கு வேண்டாம்! —'ஸ்பைடர்'
அ-அப்படியானால், நியூயார்க்கை மீட்டியது ஸ்பைடரா?...சே, மனிதனை தப்பாக எடை போட்டுவிட்டோமே நகரமே இந்த ஹீரோவுக்குக் கடமைப்பட்டுள்ளது...
ஆ-ஆனால் இவன் ஒரு குற்றவாளி மேயர்!
ஆனால் மேயர் ஒத்துக்கொள்ளவில்லை! ஸ்பைடருக்கு பரிசொன்று வழங்கப்பட வேண்டுமென்று உறுதியாகக கூறி விட்டார். அதன் பலனாக—
இதை நன்றாகக் கேள் ஸ்பைடர்! .. நகர மேயரின் சார்பாக கேப்டன் லெய்னிஸ்டர் பேசுகிறேன்...


...நகரத்திற்கு நீ செய்த உதவிக்கு நன்றி சொல்லும் வகையில், இந்த எம்பயர் ஸ்டேட் பில்டிங்கையே உனக்கு பரிசாக வழங்குகிறோம்!...
ஆஹா, பாஸ்! நமக்கே தான் இந்தக் கட்டிடம்!



ஆனால் ஸ்பைடரின் முகமோ அஷ்டகோணலாகி, கோபத்தில் சிறுத்தது...
எ-என்ன செய்ய பாஸ்?
உடனடியாக மூட்டை முடிச்சுக்களைக் கட்டு! நாம் இந்த கணமே வெளியேறுகிறோம்!


குற்ற உலகின் சாம்ராட்- உலகின் முதல் குற்றவாளி என்ற பெருமையுடன், நியூயார்க்கை ஆட்டிப் படைக்க இங்கு நான் வந்தேன்! ஆனால் இன்று, என்னை இந்த மடையர்கள், பெரிய ஹீரோ- வாக்கி, புகழாரம் சூட்டுகிறார்கள்! சே...சே! இதைவிட கேவலம் வேறு எதுவும் இருக்க முடியாது!
அப்படியாக, பைசா நாணயத்தைக்கூட எடுத்துச் செல்லாமல், ஸ்பைடரும், அவன் கூட்டாளிகளும் கிளம்பினர்!
சே, எனக்கு அழுகை அழுகையாய் வருகிறது பாஸ்! கோடிகோடியாய் கொள்ளை யடிக்க லைசென்ஸ் கிடைத்தும், போண்டியாகத் திரும்பிப் போகிறோமே!
சே, யாருக்கடா வேண்டும் இந்த நகரம்! எனக்குத்தான் டாக்டர் நட்டின் இயந்திரங் களின் இரகசியம் தெரிந்து விட்டதே! அதைப் பயன்படுத்தி, என்றாவது ஒரு நாள் உலகையே என் காலடிக்குக் கொண்டு வருகிறேன் பார்!.. ஹா!ஹா!
முற்றும்.


நமஸ்கார கிச்சா! என்ன விசேஷம்?
ராஜ விளையாட்டில் இறங்குகிறேன். குதிரை ரேஸ்!
ஜாக்கிக்கு நீ பொருத்தமான ஆள் ஆச்சே
ஜாக்கி அல்ல! ரேஸ் குதிரை சொந்தக்காரன்! இன்று சந்தையில் குதிரை வாங்கப் போகிறேன்.
ரேஸில் ஜெயித்திடும் இம்மாதிரி குதிரையை நடத்திச் செல்வேன்!
லாயம்
கொஞ்சம் சவாரி செய்து காட்டு! எப்படி ஓடுகிறது என்று பார்க்கிறேன்.
என்னாலே முடியாதப்பா!
சரி! நானே சவாரி செய்து பார்த்துக் கிறேன்.
டும் டும் டும்..


டும்..டும்..பும்..
இது சர்க்கஸ் குதிரை! பாண்டு இசைக்கு ஏற்ப ஆடுகிறது!
கைதட்டாதே! அது குனிந்து நன்றி செலுத்துகிறது!
சர்க்கஸ் ஆரம்பிப் பதுபோலே!
போதும், போதும்! இதை முதலில் விற்றுத் தொலைக்கிறேன்.
என்ன விலை?
ஊதாதே! கொஞ்ச நேரம் சும்மா இரு!
நீ இசைத் தால், குதிரை 'டுவிஸ்ட்' ஆடும்!

அறுங்கோணத்தின்
பாகங்களுக்கு
வண்ணங்கள் பல தீட்
மெருகேற்றுங்கள்
பார்க்கலாம்!






கீழ்க்கண்ட ஊர்களில் நமது காமிக்ஸ்களை விற்பனை செய்திட ஆர்வமான ஏஜெண்டுகள் தேவை

| | |
|---|---|
| அண்ணாமலை | தேனி |
| கொடுமுடி | கம்பம் |
| பழனி | சின்னமனூர் |
| கோபி | ஆண்டிபட்டி |
| வெள்ளக்கோவில் | அம்பை |
| திண்டிவனம் | சோளிங்கர் |
| விழுப்புரம் | கும்பகோணம் |
| வளவனூர் | பம்பரம் |
| உளுந்தூர்பேட்டை | மாயவரம் |
| பண்ருட்டி | மணப்பாறை |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | திருச்செந்தூர் |
| ராஜபாளையம் | சீர்காழி |
| விருதுநகர் | திருவாரூர்துடரம் |

பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த. பெ. எண். 374, சிவகாசி - 626 123.
போன்: 20649, 21169